பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

12 06 2025 **THURSDAY** 12 40 **PM**

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- தொழில்நுட்பங்களை முழுமையாக பயன்படுத்துவதன் மூலம், மக்கள் பெருமளவு பயனடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கம் வாயிலாக 78 கோடிக்கும் அதிகமானோருக்கு காப்பீட்டு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.
- நேரடி பணப்பரிமாற்ற சேவை கடந்த 11 ஆண்டுகளில் 90 மடங்கு அதிகரித்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
- மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று தண்ணீரை திறந்து வைத்தார்.
- போர்ச்சுக்கலில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – பிரான்ஸின் **Alice** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<>>>>>>**

தொழில்நுட்பங்களை முழுமையாக பயன்படுத்துவதன் மூலம், மக்களுக்கு ஏராளமான பலன் கிடைத்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தொழில்நுட்ப பயன்பாடுகளால் அரசின் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மையும் மக்களுக்கு சேவை வழங்குவதும் அதிகரித்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஏழை மக்களுக்கு அதிகாரம் வழங்கும் சக்தியாக தொழில்நுட்பம் உருவெடுத்துள்ளது என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

**<<<<<>>>>>>**

டிஜிட்டல் புரட்சி காரணமாக, சுகாதாரத் துறையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆயுஷ்மான் டிஜிட்டல் இயக்கம், **U-Win, CoWin** மற்றும் **E-**சஞ்சீவனி போன்ற தளங்கள் மூலம் லட்சக்கணக்கான மக்கள் பயனடைந்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், கடந்த 11 ஆண்டுகளில் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய தலைமையின் கீழ் ஏற்பட்ட மாற்றம் காரணமாக, தொழில்நுட்ப பயன்பாடு அனைத்து மக்களையும் சென்றடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசின் முக்கியமான திட்டங்கள் டிஜிட்டல் தகவல் பலகை மூலம் ஒருங்கிணைக்கப்பட்டிருப்பதுடன், மக்களுக்கு நேரடியாக பலன் கிடைக்கச் செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்கத்தின் மூலம் 78 கோடிக்கும் அதிகமானோருக்கு காப்பீட்டு அட்டைகள் வழங்கப்பட்டிருப்பதாகவும், சுமார் ஆறரை லட்சம் மருத்துவர்கள் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள வகை செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கோ-வின் இணையதளம் மூலம் 220 கோடிக்கும் அதிகமான தடுப்பு மருந்துகள் செலுத்தப்பட்டிருப்பதாகவும் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

**<<<<<>>>>>>**

நேரடி பணப்பரிமாற்ற சேவை கடந்த 11 ஆண்டுகளில் 90 மடங்கு அதிகரித்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

உடனுக்குடன் பணப்பரிவர்த்தனை செய்வதில் உலக அளவில் இந்தியா முன்னணியில் இருப்பதாகவும், 2024-25 ஆம் நிதியாண்டில் சுமார் 260 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் நிதியமைச்சர் தமது சமூகவலைதளப் பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

2013-14-ல் ஏழாயிரத்து 368 கோடி ரூபாயாக இருந்த டிஜிட்டல் பணப்பரிவத்தனை தற்போது 6 லட்சத்து 83 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த 11 ஆண்டுகளில் நாட்டின் தொழில்நுட்ப வளர்ச்சி, புரட்சிகரமான நிலையை எட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

டிஜிட்டல் புதுமைகளுக்கான மையமாக இந்தியா உருவெடுத்திருப்பதுடன், தொழில்நுட்பம் சார்ந்த ஆளுகை மேற்கொள்ளப்படுவதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

**UPI** பரிவர்த்தனைகளுக்காக வணிகர்களிடமிருந்து பணம் பிடித்தம் செய்யப்படும் என்று வெளியான தகவல் முற்றிலும் தவறானது என்று மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுபோன்ற தகவல்கள், அடிப்படை ஆதாரமற்றவை என்பதோடு, மக்களை திசை திருப்பக் கூடியவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய தகவல்களை பரப்புவது மக்களிடம் அச்சத்தையும், சந்தேகத்தையும் ஏற்படுத்தக்கூடும் என்றும் நிதியமைச்சகம் கூறியுள்ளது.

**UPI** வாயிலான டிஜிட்டல் பணப்பரிவத்தனைகளை தொடர்ந்து ஊக்குவிக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் நிதியமைச்சக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

காவிரிடெல்டா பாசனத்திற்காக தமிழகத்தின் மேட்டூர் அணையிலிருந்து இன்று தண்ணீர் திறக்கப்பட்டது.

மேட்டூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மதகுகளை இயக்கி தண்ணீரை திறந்து வைத்தார்.

இதன்மூலம் டெல்டா மாவட்டங்களில் சுமார் 17 லட்சம் ஏக்கருக்கும் அதிகமான நிலங்கள் பாசன வசதி பெறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

நாடுமுழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம் விவசாயிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

வேளாண் விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கிலும், நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு குறித்தும் விஞ்ஞானிகள் விவசாயிகளிடம் நேரடியாக எடுத்துரைப்பதற்கு ஏதுவாகவும் இந்த பிரச்சார இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் நாமக்கல் மாவட்டம், கொண்டமநாயக்கன்பட்டியில் நடத்தப்பட்ட இந்த இயக்கம், தங்களுக்கு மிகவும் உதவிகரமாக அமைந்ததாக பயனாளிகள் தெரிவித்தனர்.

***(Sound Byte – பயனாளிகள் - 54 Sec.)***

**<<<<<>>>>>>**

குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் திருப்பூரில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில் ஏராளமானோர் பங்கேற்று உறுதிமொழி ஏற்றுக் கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சபரிஷ் 25 செகண்ட்ஸ்)

இதேபோல், தருமபுரியில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியின் முடிவில், குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு குறித்த போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தண்டபாணி 40 செகண்ட்ஸ்)

**<<<<<>>>>>>**

கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களில் **Ragging–**ஐ தடுக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரங்களை இதுவரை தெரிவிக்காத கல்வி நிறுவனங்கள் விரைவில் தாக்கல் செய்யுமாறு பல்கலைக் கழக மானியக் குழு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, மாணவர்களிடமிருந்து 30 நாட்களுக்குள் ஆன்லைன் வாயிலாக உத்தரவாதத்தை பெற்று சமர்ப்பிக்குமாறும் பல்கலைக் கழக மானியக் குழுவின் செயலாளர் திரு. **Manish Joshi** கேட்டுக் கொண்டுள்ளார்.

<<<<<>>>>>>

மகாராஷ்ட்ரா, கர்நாடகா, கேரளா மற்றும் தமிழகத்தில் அடுத்த மூன்று நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தில்லியின் ஒரு சில பகுதிகளில் வெப்பநிலை அதிகரிக்கக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

போர்ச்சுக்கலில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – பிரான்ஸின் **Alice** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-0, 6-1 என்ற செட்கணக்கில் தென்னாப்பிரிக்காவின் **Warona - Wozuko** இணையை வென்றது.

----------

<<<<<>>>>>>

**Skopje** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manav Thakkar, Manush Shah, Manika Batra** ஆகியோர் பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<<>>>>>>

புரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா – அர்ஜென்டினா இடையேயான இரண்டாவது ஆட்டம் இன்று **Amstelveen**-ல் இன்று நடைபெறுகிறது.

<<<<<END>>>>>>